**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 15.05.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகளுக்கான 6 நாள் பயணத்தின் முதல் கட்டமாக, இன்று, UAE தலைநகர் அபுதாபி சென்றடைந்துள்ளார்.

பலதரப்பு அமைப்புகளில் சீர்திருத்தம் கொண்டு வருவதில் கூட்டாண்மை நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட இந்தியா உறுதி பூண்டுள்ளதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்தியா தான், எண்ணெய் விலை உயர்வை திறம்பட்ட முறையில் சமாளித்து வருவதாக, மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

புதுச்சேரியில், உப்பளம் தொகுதி, அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன், தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

*மோடி - 1(13)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகளுக்கான 6 நாள் பயணத்தின் முதல் கட்டமாக, இன்று, UAE தலைநகர் அபுதாபி சென்றடைந்துள்ளார். UAE அதிபர் ஷேக் முகமது பின் ஜாயேத் அல்—நஹ்யானை அவர் சந்தித்து, எரிசக்தி ஒத்துழைப்பு உட்பட இருதரப்பு உறவுகள் குறித்தும், பரஸ்பர அக்கறையுள்ள பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சனைகள் குறித்தும் விவாதிக்கிறார். இருதரப்பு உறவுகளை, வலுவான அரசியல் கலாச்சார மற்றும், பொருளாதார ஒத்துழைப்புடன் கூடிய தந்திரோபாய கூட்டாண்மையாக மேம்படுத்துவது குறித்தும் விவாதங்கள் இடம்பெறவுள்ளன. இந்தியாவிற்கும், ஐக்கிய அரபு அமீரகத்திற்கும் இடையிலான உறவுகளில் எரிசக்தி ஒத்துழைப்பு, முக்கியத் தூணாகத் திகழ்வதும், கடந்த ஆண்டு இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் தேவையில் 11 சதவிகிதம் அந்நாட்டில் இருந்து பெறப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. பிரதமரின் 5 நாடுகள் பயணம் குறித்து, கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

*மோடி – 2 வாய்ஸ் (17)*

(வாய்ஸ்)

பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது பயணத்தின் இரண்டாம் கட்டமாக, அபுதாபியில் இருந்து இன்றே நெதர்லாந்து செல்கிறார். நெதர்லாந்து மன்னர் திரு.வில்லெம் அலெக்சாண்டர், ராணி மேக்சிமா, பிரதமர் ராப் ஜெட்டன் ஆகியோரை அவர் சந்திக்கிறார். பாதுகாப்பு, பசுமை ஹைட்ரஜன், செமி கண்டக்டர் உட்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பாக, பிரதமரின் நெதர்லாந்து பயணம் அமைகிறது.

நெதர்லாந்தை தொடர்ந்து, பிரதமர், வரும் ஞாயிற்றுக்கிழமை, ஸ்வீடனுக்கும், வரும் 18ஆம் தேதி நார்வே நாட்டிற்கும் பயணம் மேற்கொள்கிறார். ஸ்வீடனில் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி உர்சுலா வான்—டெர் லெயானுடன் இணைந்து, ஐரோப்பிய வர்த்தக தலைவர்கள் கூட்டத்திலும், நார்வேயில், 3ஆவது இந்தோ—நார்டிக் உச்சி மாநாட்டிலும் பிரதமர் கலந்து கொள்கிறார்.

5 நாடுகள் பயணத்தின் இறுதிக் கட்டமாக, பிரதமர் திரு.நரேந்திர மோடி வரும் 19ஆம் தேதி இத்தாலி சென்று அந்நாட்டு அதிபர் திரு. செர்ஜியோ மாத்ரெல்லா உள்ளிட்ட தலைவர்களை சந்திப்பார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

*பிரிக்ஸ் - (17)*

**சீர்திருத்தங்களுடன் கூடிய, திறம்பட்ட பலதரப்பு ஒத்துழைப்பு** என்னும் குறிக்கோளை எட்டுவதில், கூட்டாண்மை நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட, **இந்தியாவின் உறுதிப்பாடு** தொடர்வதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். புதுடெல்லியில் நடைபெறும், பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் இரண்டாம் நாளான இன்று, திறந்த நிலை அமர்வு ஒன்றில் உரையாற்றிய அவர், பலதரப்பு அமைப்பகளில் உலகின் நடப்பு யதார்த்தங்களுக்கு ஏற்ப, சீர்திருத்தம் கொண்டுவரப் படுவதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும், குறிப்பாக சர்வதேச நிதிக் கட்டமைப்பில் சீர்திருத்தங்களுக்கு அவசரத் தேவை இருப்பதாகவும் கூறினார். தனிப்பட்ட நாடுகளின் இறையாண்மை, நில ஒருமைப்பாடு, மற்றும் பிரத்யேகத் தேவைகளை மதிக்கும் அதே வேளை, ஒவ்வொரு நாடும், சர்வதேச சட்டங்களுக்கு இணங்குவதை உறுதிப்படுத்தும் வகையில் சீர்திருத்தங்கள் அமைய வேண்டும் என்று டாக்டர் ஜெய்சங்கர் மேலும் கூறினார். பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தின் நிகழ்வுகளுக்கு இடையே, ஈரான், கியூபா, உகாண்டா உள்ளிட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

*ராஜ்நாத் (13)*

எதிரிகளை, அவர்கள் அறியா வண்ணம் சென்று தாக்க வல்ல, Stealth ரக போர் விமானங்களை இந்தியாவிலேயே தயாரிக்கும் திட்டத்திற்குத் தேவையான, ஒருங்கிணைப்பு, மேம்பாடு மற்றும் பரிசோதனை வசதிகளை உள்ளடக்கிய, அதி நவீன AMCA மையத்தை, இன்று ஆந்திர மாநிலம், புட்டபர்த்தியில், பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தொடக்கி வைத்தார். நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த, இனியும் மற்றவர்களை நம்பியிருக்க முடியாது என்றும், தேசிய பாதுகாப்பிற்கு அடிப்படை, சுயசார்பு தான் என்றும், விழாவில் பேசுகையில் அவர் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையின் கீழ், இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி தற்போது, 1.42 லட்சம் கோடி ரூபாயாகவும், இத்துறையின் ஏற்றுமதி, 40 ஆயிரம் கோடி ரூபாயாகவும், அதிகரித்து இருப்பதாக, திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்தார். ஆந்திர முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*நீட் தேர்வு (14)*

நீட்—யு.ஜி. மறு தேர்வு ஜூன் 21ஆம் தேதி நடைபெறும் என தேசிய தேர்வு முகமை இன்று அறிவித்துள்ளது. மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தேசிய தேர்வு முகமையின் இணைய தளத்தில் வெளியாகும்

தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாதம் 3ஆம் தேதி நடைபெற்ற நீட்—யு.ஜி.நுழைவுத் தேர்வு, கேள்வித்தாள் முன்கூட்டியே வெளியான குற்றச்சாட்டின் பேரில் பின்னர் ரத்து செய்யப்பட்டது.

மாணவர்களின் நலனுக்கே அரசு உயர் முன்னுரிமை அளிப்பதாக மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், கூறினார். நீட்—யு.ஜி. மறுதேர்வு எழுதும் மாணவர்கள் அடுத்த மாதம் 14ஆம் தேதிக்குள், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டு பெறுவார்கள் என்றும், அவர் தெரிவித்தார். அடுத்த ஆண்டு முதல் நீட்—யு.ஜி. தேர்வு, OMR விடைத்தாளுக்குப் பதிலாக, கணினி வழித் தேர்வாக நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

*எண்ணெய் விலை 1 - (06)*

மேற்காசிய பிணக்குகளைத் தொடர்ந்து ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வை சமாளிக்க, உலகமே போராடும் நிலையில், இந்தியாவில் அந்நிலை இல்லை என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். இன்று சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். சமூக ஊடகப் பதிவு குறித்து கூடுதல் விவரங்கள்…

**(வாய்ஸ்)**

*எண்ணெய் விலை 2 வாய்ஸ் - (14)*

**(வாய்ஸ்)**

பல்வேறு நாடுகளில் பெட்ரோல்—டீசல் விலை, 20 முதல், சுமார் 100 சதவிகிதம் வரை உயர்ந்த நிலையில், இந்தியாவில் மட்டுமே, பெட்ரோல் விலை உயர்வு, 3.2 சதவிகித அளவிலும், டீசல் விலை உயர்வு, 3.4 சதவிகித அளவிலும், கட்டுப்பாட்டில் வைக்கப் பட்டுள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார். சர்வதேச சந்தையில் விலை நிலவரங்கள் தீவிரமடைந்து, Brent கச்சா எண்ணெய் விலை, பீப்பாய்க்கு 100 டாலரைத் தாண்டி அதிகரித்த நிலையிலும், இந்தியாவின் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள், பல வாரங்களுக்கு, பெரும் இழப்பை தாங்களே ஏற்றுக்கொண்டு, பொருளாதார அழுத்தம் மற்றும் பணவீக்கத்தில் இருந்து மக்களை பாதுகாத்து இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். பொருளாதார ஸ்திரத்தன்மை, மக்கள் நலன் இரண்டையும் ஒரு சேர பராமரிப்பதில், இந்தியா, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையில், தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதாக அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

*அன்பழகன் (07)*

புதுச்சேரியில், உப்பளம் தொகுதி, அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினரும், அக்கட்சியின் மாநிலச் செயலருமான திரு. அன்பழகன், தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை, சட்டப்பேரவைச் செயலர் இன்று வெளியிட்டுள்ளார். திரு. அன்பழகன், தற்காலிக சபாநாயகராக முறைப்படி பதவியேற்ற பின்னர், புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, பதவிப் பிரமாணம் செய்து வைப்பார்.

*புதுச்சேரி செவிலியர் (08)*

புதுச்சேரியில் **சென்டாக் அரசுக் கோட்டாவின்** *கீழ்,* B.Sc., Nursing படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள், இதற்கான குழு நிறைவுத் தேர்வில் பங்கேற்க வரும் 18ஆம் தேதி முதல், ஜூன் 1ஆம் தேதி வரை, சென்டாக் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நுழைவுத் தேர்வு, ஜூன் 14ஆம் தேதி நடைபெறும். B.Sc., Nursing படிப்பில் சேர விரும்புவோர், சென்டாக் இணையதளம் மூலம் முதலில், நீட் அல்லாத படிப்புகளுக்கும், பின்னர் தனியாக B.Sc., Nursing படிப்பிற்கும் இரண்டு முறை விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*கணக்கெடுப்பு காரைக்கால் (13)*

2027ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டமாக, வீடுகள் மற்றும் கட்டிடங்களை பட்டியலிடும் பணிகள் தொடங்க இருப்பதை முன்னிட்டு, காரைக்காலில் இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் இன்று நடைபெற்றது. காரைக்கால் மாவட்ட ஆட்சியரும், முதன்மை மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரியுமான திருமதி இஷிதா ராட்டி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சுய கணக்கெடுப்பு விவரங்களை பொதுமக்கள் இணையதளம் மூலம் பதிவு செய்யும் நடைமுறைகள் குறித்தும், இது குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளிப்பது குறித்தும், அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறப்பட்டது. காரைக்கால் மாவட்டத்தில், சுய கணக்கெடுப்பு பணிகளை, நூறு

சதவிகிதம் முழுமையாக எட்ட, அனைத்து துறை தலைவர்களும், தொடர்புடைய அலுவலர்களும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

*மக்கள் மன்றம் காரைக்கால் - (09)*

காரைக்காலில் பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிய, காவல்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மக்கள் மன்றம் நிகழ்ச்சி நாளை நடைபெறவுள்ளது. காரைக்கால் மாவட்ட முதுநிலை காவல் கண்காணிப்பாளர் உட்பட உயர்நிலை காவல்துறை அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு, பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்டறிய உள்ளனர். காரைக்கால் பகுதி மக்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்டு, தங்கள் பகுதி சார்ந்த சட்டம்—ஒழுங்கு மற்றும் இதர கோரிக்கைகளை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கலாம் என்றும் காவல்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

*வானிலை - (19)*

தென்மேற்குப் பருவமழை, அடுத்த 24 மணி நேரத்தில், தெற்கு வங்கக் கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல், மற்றும், அந்தமான்—நிக்கோபார் தீவுப் பகுதிகளில் தொடங்கக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 26ஆம் தேதி பருவமழை கேரளத்தை எட்டக்கூடும் என்றும், இக்கணிப்பில், முன்—பின் 4 நாள் தவறு நேரலாம் என்றும் இந்திய வானிலை ஆய்வுத் துறை கூறியுள்ளது. கேரளத்தில் ஜூன் 1ஆம் தேதி தென்மேற்குப் பருவமழை தொடங்குவதே வழக்கம் என்பதும் குறிப்பிடத் தக்கது. இதற்கிடையே, நேற்று வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, இன்றும் அதே பகுதிகளில் நீடிக்கிறது. இன்றைய தினம், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, நாகை, திருவாரூர் மாவட்டங்கள், மற்றும் புதுச்சேரி—காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப் படுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், கடலோர தமிழகத்தின் ஒருசில இடங்கள், மற்றும், புதுச்சேரி—காரைக்கால் பகுதிகளில் மிதமான மழைக்கும், தமிழகத்தின் இதர பகுதிகளில், லேசான மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகமுள்ள தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள், அரபிக்கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*ஐ.பி.எல். (04)*

ஐபிஎல் கிரிக்கெட்டில் இன்று இரவு 7.30 மணிக்கு லக்னோவில் நடைபெறும் போட்டியில், லக்னோ—சென்னை அணிகள் மோதவுள்ளன. நேற்று இரவு தரம்சாலாவில் நடைபெற்ற போட்டியில், மும்பை அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில், பஞ்சாப் அணிக்கு எதிராக வெற்றி பெற்றது.

*விளையாட்டு (10)*

ஸ்காட்லாந்தில் வரும் ஜூலை—ஆகஸ்ட் மாதங்களில் நடைபெறவுள்ள காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான இந்தியாவின் தயார் நிலை குறித்து, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று புதுடெல்லியில் உயர்நிலைக் கூட்டம் நடத்தினார். இந்திய விளையாட்டு வீரர்கள் அதிகபட்ச திறனுடன் இப்போட்டிகளில் பங்கேற்கத் தேவையான எல்லா உதவிகளையும் அரசு வழங்கும் என்று அவர் தெரிவித்தார். விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள், வசதிகள், மற்றும், சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு குறித்து இக்கூட்டத்தில் மறு ஆய்வு செய்யப்பட்டது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகளுக்கான 6 நாள் பயணத்தின் முதல் கட்டமாக, இன்று, UAE தலைநகர் அபுதாபி சென்றடைந்துள்ளார்.

பலதரப்பு அமைப்புகளில் சீர்திருத்தம் கொண்டு வருவதில் கூட்டாண்மை நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட இந்தியா உறுதி பூண்டுள்ளதாக, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இந்தியா தான், எண்ணெய் விலை உயர்வை திறம்பட்ட முறையில் சமாளித்து வருவதாக, மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ கூறியுள்ளார்.

புதுச்சேரியில், உப்பளம் தொகுதி, அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர் திரு. அன்பழகன், தற்காலிக சபாநாயகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS/SM/VM

Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 15.05.2026 / Script